



# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"






Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 345 07.06.2026 SUNDAY VAIKASI : 24 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 345 07.06.2026 ஞாயிற்றுக்கிழமை வைகாசி : 24 விலை : ரூ.5/–


## மக்களிடம் நல்ல வரவேற்பு... காவல் நடை ரோந்து பணிகளை தொடர

# "டிஜிபி அதிரடி உத்தரவு"



சென்னை: ஜூன்.7

தமிழக சட்டம் மற்றும் ஒழுங்கு டிஜிபியாக பொறுப்பேற்றுள்ள மகேஷ் குமார் அகர்வால், மாநிலத்தில் குற்றங்களைத் தடுக்கவும், பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் காவல்துறையினருக்கு தீவிர நடை ரோந்து பணிகளை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், காவல் நடை ரோந்து பணி மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. எனவே காவல்நிலைய அதிகாரி உட்பட SP, DCP என அனைவருமே ரோந்து பணிகளில் ஈடுபட வேண்டும் என டிஜிபி மகேஷ் குமார் அகர்வால் அறிவுறுத்தி உள்ளார்.

உள்ளூர் சூழ்நிலைகளை புரிந்து கொண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை வலுப்படுத்த காவல் நடை ரோந்து உதவியதாக டிஜிபி மகேஷ் குமார் அகர்வால் குறிப்பிட்டு உள்ளார். மக்களின் நம்பிக்கையை மேம்படுத்தவும், சமூகத்துடனான காவல்துறையின் தொடர்பை வலுப்படுத்தவும் நடவடிக்கை எடுப்பது உள்ளதாக டிஜிபி தெரிவித்துள்ளார்.

காவல் நடை ரோந்து பணிகளுக்கு பொது மக்களிடையே நல்ல வரவேற்பும், பாராட்டும் கிடைத்து உள்ளது. மேலும் இந்த ரோந்து பணி மூலம் சட்டம், ஒழுங்கு தொடர்பான சிக்கல்களை துவக்கத்திலேயே எளிதாக கண்டறிந்து நடவடிக்கை எடுக்க முடியும் என்று டிஜிபி தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பான, அமைதியான சூழல் உருவாக்கப்படும் என்று டிஜிபி தெரிவித்துள்ளார்.

## நார்வே செஸ் சாம்பியன் பிரக்ஞானந்தாவுக்கு முதல்வர் விஜய் வாழ்த்து



சென்னை: ஜூன்.7-

நார்வே செஸ் 2026 தொடரில் பட்டத்தை வென்ற முதல் இந்தியர் என்ற வரலாற்றுச் சாதனையைப் படைத்த கிராண்ட்மாஸ்டர் பிரக்ஞானந்தாவுக்கு முதல்வர் விஜய் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

நார்வே செஸ் போட்டியில் பட்டம் வென்றார் இந்திய கிராண்ட் மாஸ்டர் பிரக்ஞானந்தா. இதன் மூலம் இந்த பட்டத்தை வென்ற முதல் இந்தியர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார்.

இதனையடுத்து, முதல்வர் விஜய் தனது எக்ஸ் தளத்தில், "நார்வே தலைநகர் ஆஸ்லோவில் நடைபெற்ற நார்வே செஸ் 2026 (Norway Chess 2026) தொடரில் அறிவார்ந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி, பட்டத்தை வென்ற முதல் இந்தியர் என்ற வரலாற்றுச் சாதனையைப் படைத்திட்ட கிராண்ட்மாஸ்டர் பிரக்ஞானந்தாவுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகள்.

ஒரே தொடரில் நடப்புச் சாம்பியன் மாக்னஸ் கார்ல்செனை இரண்டு முறையும், நான்கு போட்டிகளில் தொடர்ந்து வெற்றியும் பெற்று சாதனை படைத்துள்ளார். தமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் பெருமை சேர்த்துள்ள கிராண்ட்மாஸ்டர் பிரக்ஞானந்தா புதிய சாதனைகளைப் படைத்திட எனது வாழ்த்துகள்" இவ்வாறு அவர் கூறிய்யுள்ளார்.

## கே.என்.நேரு மீது லஞ்ச ஒழிப்பு துறை வழக்கு: ஜூன் 23 வரை நடவடிக்கை எடுக்கக் கூடாது என நீதிபதிகள் உத்தரவு

சென்னை: ஜூன்.7-

கடந்த திமுக ஆட்சி காலத்தில் நகராட்சி நிர்வாகத் துறையில் 2,538 உதவிப் பொறியாளர்கள் மற்றும் இளநிலைப் பொறியாளர்கள் உள்ளிட்ட பணி நியமனங்களுக்கு ரூ.634 கோடி வரை லஞ்சம் பெற்று முறைகேடாக நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக குற்றம்சாட்டி டிஜிபிக்கு அமலாக்கத் துறை கடிதம் அனுப்பியது.

அதன் அடிப்படையில் முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு உள்ளிட்டோர் மீது வழக்குப்பதிவு செய்ய லஞ்ச ஒழிப்புத்துறைக்கு உத்தரவிடக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் அதிமுக எம்.பி ஐ.எஸ்.இன்பதுரை வழக்கு தொடர்ந்திருந்தார்.

இவ்வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், சம்பந்தப்பட்டவர்கள் மீது வழக்குப்பதிவு செய்ய லஞ்ச ஒழிப்புத் துறைக்கு உத்தரவிட்டது. ஆனால், லஞ்ச ஒழிப்புத் துறை வழக்குப்பதிவு செய்யவில்லை எனக்கூறி, உயர்நீதிமன்றத்தில் இன்பதுரை அவமதிப்பு வழக்கு தொடர்ந்திருந்தார்.



அதேபோல் வழக்குப்பதிவு செய்ய பிறப்பித்த உத்தரவை எதிர்த்து கே.என்.நேரு மற்றும் தமிழக அரசு தரப்பிலும் மறுஆய்வு மனுக்கள் தாக்கல்செய்யப்பட்டிருந்தன. இதன் மீதான விசாரணை ஜூன் 23க்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், இந்த விவகாரத்தில் முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு உள்ளிட்டோர் மீது லஞ்ச ஒழிப்புத்துறை வழக்குப்பதிவு செய்துள்ளதாக, தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேரு தரப்பில் ஆஜரான மூத்தவழக்கறிஞர் பி.எச். அர்விந்த் பாண்டியன் முறையீடு செய்தார்.

அப்போது அவர், ''இதற்கு முன்பாக இருந்த அரசு தலைமை வழக்கறிஞர், இந்த வழக்குகள் விசாரணைக்கு வரும்வரை எந்த நடவடிக்கையும் எடுக்கமாட்டோம் என ஏற்கெனவே நீதிமன்றத்தில் உத்தரவாதம் அளித்தி ருந்தார்'' என்றார்.

அரசு தலைமை வழக்கறிஞர் விஜய் நாராயண் ஆஜராகி, ''நகராட்சி பணி நியமனங்களில் கோடிக்கணக்கில் முறைகேடு நடந்துள்ளதாக அமலாக்கத்துறை ஆதாரப்பூர்வமாக அனுப்பிய கடிதத்தின் அடிப்படையில் கே.என்.நேரு உள்ளிட்டோர் மீது லஞ்ச ஒழிப்புத்துறை வழக்குப்பதிவு செய்துள்ளது'' என்றார்.

அப்போது குறுக்கிட்ட தலைமை நீதிபதி. ''இந்த விவகாரம் தொடர்பான நீதிமன்ற அவமதிப்பு உள்ளிட்ட வழக்குகள் இம்மாத இறுதியில் விசாரணைக்கு வரவுள்ள நிலையில், அதுவரை எந்தநடவடிக்கையும் எடுக்க மாட்டோம் என முந்தைய அரசு தலைமை வழக்கறிஞர் உத்தரவாதம் அளித்திருந்தார்.

ஆனால் அதை மீறி தற்போது எதற்காக அவசர கதியில் வழக்குப்பதிவு செய்துள்ளீர்கள்?'' என கேள்வி எழுப்பினார். அதற்கு தலைமை வழக்கறிஞர் விஜய் நாராயண், ''முந்தைய அரசு தலைமை வழக்கறிஞர் அளித்துள்ள உத்தரவாதம், தற்போது எங்களைக் கட்டுப்படுத்தாது. மேலும் வாய்மொழியாகவே அவர் உத்தரவாதம் அளித்துள்ளார்.

அதுதொடர்பாக எனக்கு தெரியாது'' என்றார். அதையடுத்து நீதிபதிகள், ''இந்த வழக்கு கடந்த ஏப்ரல் மாதம் விசாரணைக்கு வந்த போது அடுத்த விசாரணை வரை எந்த நடவடிக்கையும் எடுக்க மாட்டோம் என முந்தைய அரசு தலைமை வழக்கறிஞர் உத்தரவாதம் அளித்திருந்தார்.

எனவே தற்போதைய சூழலில் லஞ்ச ஒழிப்புத்துறையின் மேல் நடவடிக்கையை நிறுத்திவைப்பதால் அரசுக்கு எந்த பாதிப்பும் வந்துவிடாது. எனவே இந்த வழக்கில் ஜூன் 23 வரை யார் மீதும் எந்த நடவடிக்கையும் எடுக்கக்கூடாது'' என உத்தரவிட்டு விசாரணையை தள்ளிவைத்தனர்.

### கோவையில் மாவட்ட, மண்டல் தலைவர்கள் உட்பட

## அண்ணாமலை ஆதரவாளர்கள் பாஜகவில் இருந்து விலகல்

கோவை: ஜூன்.7-

பாஜகவில் இருந்து அண்ணா மலை நேற்று வெளியேறிய நிலையில், கோவையில் அவரது ஆதரவாளர்களான மாவட்ட தலைவர்கள் உட்பட பலர் விலகி, பாஜகவுக்கு அதிர்ச்சி அளித்துள்ளனர்.

அண்ணாமலைக்கு தொடர்ந்து போஸ்டர் அடித்து, தனிக்கட்சி தொடங்குவதை எதிர்பார்த்திருந்த அவரது தீவிர ஆதரவாளரான பாஜக முன்னாள் மாவட்ட தலைவர் பாலாஜி உத்தம ராமசாமி நேற்று செய்தியாளர்களிடம் கூறும்போது, "அண்ணாமலை தொடங்கிய 'வீ த லீடர்' அமைப்பில் உறுப்பினராக சேர்ந்துள்ளோம்.

இது பாஜகவின் 'பி'டீம் கிடையாது. வரும் தேர்தலில் போட்டி என அண்ணாமலை தெரிவித்துள்ளார். அது இடைத்தேர்தலாகவும் இருக்கும். உள்ளாட்சித் தேர்தலாகவும் இருக்கும்.



விஜய் அண்ணாமலை ஆகிய இருவரும்தான் இனி தமிழக அரசியலில் இருப்பார்கள்" என்றார். மற்றொரு தீவிர ஆதரவாளரான கோவை தெற்கு மாவட்ட பாஜக தலைவர் சந்திரசேகர் கட்சியில் இருந்து வெளியேறினார்.

அதேபோல் தெற்கு மாவட்டத்தில் உள்ள 22 மண்டல் தலைவர்களில் 14 பேர் விலகிய நிலையில் அவர்களுடன், பொறுப்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்களும் விலகினர்.

முன்னாள் மாவட்ட தலைவரும், எம்பி தேர்தலில் பொள்ளாச்சி தொகுதியில் போட்டியிட்டவருமான கே.வசந்தராஜன் வெளியிட்டுள்ள கடிதத்தில், "கடந்த 1998ம் ஆண்டு முதல் கிளைத் தலைவராக ஆரம்பித்து எம்.பி. வேட்பாளர் வரை என் போன்ற சாமானியரை உயர்த்தியது பாஜக.

கடந்த 28 ஆண்டுகளாக பயணித்த நிலையில், தற்போதைய தமிழக பாஜக, கட்சிக்கு பாடுபட்டவர்களை மரியாதையுடன் நடத்த வேண்டும் என்பது எனது ஆவல்.

இந்த நிலையில் உயிருக்கும் மேலாக நேசித்த பாஜகவில் இருந்து விலகுகிறேன். தமிழக நலன் கொண்ட தேசிய சிந்தனை கொண்ட, ஊழலற்ற, நேர்மையான அரசியல் பாதையில் அண்ணாமலையுடன் இணைந்து பயணிக்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.



■ தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டம் கோவிலாச்சேரி ஊராட்சி முழலை கிராமத்தில் உள்ள பாசன வாய்க்கால்கள் துபர்வாரும் பணிகள் நடைபெற்று வருவதை மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் திரு.ர.வினோத் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். வேளாண்மை பொறியியல்துறை கண்காணிப்பு பொறியாளர் திரு.எழிலன் அவர்கள், செயற்பொறியாளர் திரு.ஐயப்பன் அவர்கள், உதவி பொறியாளர் மற்றும் விவசாயிகள் கலந்துகொண்டார்கள்.

## நல்லாறு பாதுகாப்பு இயக்கத்தினர் விதைத்த விதை!

### வாக்குறுதியை மறக்காத மக்கள் பிரதிநிதி! திருமுருகன்பூண்டியில் நெகிழ்ச்சியை ஏற்படுத்திய அமைச்சர் கமலியின் நதி பாதுகாப்பு ஆய்வு!

திருமுருகன்பூண்டி ஜூன் 7:

"தேர்தல் களத்தில் வேட்பாளராக இருந்தபோது கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், அமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் நேரடியாக நதிக்கே வந்து ஆய்வு செய்துள்ளார்" என்று கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கமலி அவர்களுக்குப் பூண்டி பகுதி மக்கள் தங்களது நெஞ்சார்ந்த வரவேற்பைத் தெரிவித்துள்ளனர்.







திருப்பூர் அருகே உள்ள அவிநாசி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருமுருகன்பூண்டி நல்லாற்றில் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கமலி திடீர் அதிரடி கள ஆய்வு மேற்கொண்டார். கடந்த தேர்தல் சமயத்தில், நல்லாறு பாதுகாப்பு இயக்கத்தினர் மற்றும் இப்பகுதி பொதுமக்கள் இணைந்து ஆற்றைப் பாதுகாக்க வேண்டி அமைச்சரிடம் கோரிக்கை மனு அளித்திருந்தனர்.

தற்போது தேர்தலில் வெற்றி பெற்று அமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், தனது சொந்த தொகுதியான அவிநாசி தொகுதிக்கு உட்பட்ட நல்லாற்றின் தற்போதைய நிலை குறித்தும், அதனைத் தூய்மைப்படுத்திச் சீரமைப்பது குறித்தும் அவர் விரிவாக ஆய்வு செய்தார். தொடர்ந்து அமைச்சர், "நல்லாற்றை மீட்டெடுப்பதற்கான தூய்மை மற்றும் உள்கட்டமைப்புப் பணிகள் மிக விரைவில் தொடங்கப்படும்" என்று உறுதியளித்தார். அமைச்சரின் இந்த உடனடி அதிரடி ஆக்ஷனால் நல்லாறு பாதுகாப்பு இயக்கத்தினர் மற்றும் பூண்டி பகுதி பொதுமக்கள் மிகுந்த உற்சாகமடைந்துள்ளனர்.

"நதிகள் காக்கப்பட வேண்டும்" என்பது வெறும் முழக்கமாக மட்டுமே இருந்து வரும் நிலையில், தேர்தலில் கொடுத்த வாக்குறுதியைத் தட்டாமல், அமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் தனது சொந்த தொகுதியான அவிநாசி நல்லாற்றுக்கே நேரில் வந்து கள ஆய்வு செய்துள்ள அமைச்சர் கமலி அவர்களின் செயல் பாராட்டுக்குரியது. நல்லாறு பாதுகாப்பு இயக்கத்தினர் சளைக்காமல் காட்டிய முயற்சியின் பிரதிபலனாக, சுற்றுச்சூழல் ஈடுபாட்டிற்குத் தற்போது நல்லதொரு தொடக்கம் கிடைத்துள்ளது.

அமைச்சரின் இந்த அதிரடி ஆய்வு வெறும் காட்சிகளோடு நின்றுவிடாமல், நல்லாற்றில் கழிவுநீர் கலப்பதைத் தடுத்து, ஆக்கிரமிப்புகளை அகற்றி, நதியை அதன் பழைய தூய்மையான வடிவிற்கு முழுமையாக மீட்டெடுக்கும் வரை பணிகள் தொய்வின்றி நடக்க வேண்டும், வரும் அடுத்த தலைமுறையினருக்குப் பசுமையான மற்றும் சுத்தமான நீர் வரக்கூடிய நல்லாற்றினை ஆரோக்கியமான முறையில் விட்டுச் செல்ல வேண்டும்" என்பதே நல்லாறு பாதுகாப்பு இயக்கத்தினர் மற்றும் பூண்டி பகுதி வாழ் பொதுமக்களின் மிக முக்கியமான மற்றும் உருக்கமான வேண்டுகோளாக உள்ளது.



# வேளாண்மைக்கான தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும்: அமைச்சர் வினோத்

கும்பகோணம்: ஜூன்.8–

“வேளாண்மைக்கான தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும். காவிரியில் விரைவில் நீர் திறக்கப்படும்,” என வேளாண்மை துறை அமைச்சர் வினோத் தெரிவித்தார்.

கும்பகோணம் வட்டம், கோவிலாச்சேரி, மிழலையில் சி, டி பிரிவாய்க்கால் தூர்வாரும் பணியை வேளாண்மை துறை அமைச்சர் வினோத் இன்று தொடங்கி வைத்தார். வேளாண்மை பொறியியல் துறை சார்பில் கோவிலாச்சேரி மிழலையில் 6.9. கி,மீ., கல்லூரில் 14.6 கி.மீ., திருநல்லூரில் 2.6 கி.மீ., நீரத்தநல்லூரில் 2.5 கி.மீ என மொத்தம் 26.65 கி.மீ., தூரத்திற்கு ரூ.9.25 லட்சம் மதிப்பில் சி.டி. பிரிவு வாய்க்கால்கள் தூர்வாரும் பணி தொடங்கியது.

மிழலையில் நடைபெற்ற தொடக்க விழாவில் வேளாண்மை துறை அமைச்சர் வினோத் பங்கேற்று தொடங்கி வைத்தார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கூறுகையில், “ஜூன் 12ம் தேதி மேட்டூரில் அணை திறக்கப்படுமா என செய்தியாளர்கள் கேட்டதற்கு, ‘விரைவில் திறக்கப்படும்” என்றார்.

பின்னர், வேளாண்மைக்கு என தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படுமா என செய்தியாளர்கள் கேட்டதற்கு, ‘வேளாண்மைக்கான தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும்’ என தெரிவித்தார். தொடர்ந்து, அரசலாற்றில் 3ம் கட்டமாக 4.30 கி.மீ. தூரத்தில் நடைபெறும் தூர்வாரும் பணியை வேளாண்மை துறை அமைச்சர் வினோத் தொடங்கி வைத்தார்.



# கிளாம்பாக்கம் வழக்கு: ஆம்னி பேருந்துகளுக்கான தடையை ரத்து செய்து ஐகோர்ட் உத்தரவு

சென்னை: ஜூன்.8–

தனியார் ஆம்னி பேருந்துகள் கிளாம்பாக்கத்தில் இருந்து தான் இயக்க வேண்டும் என மாநில போக்குவரத்து ஆணையம் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னையில் இருந்து தென் மாவட்டங்களுக்குச் செல்லும் அனைத்து தனியார் ஆம்னி பேருந்துகள், கிளாம்பாக்கம் பேருந்து முனையத்திலிருந்து தான் இயக்கப்பட வேண்டும் என்றும், சென்னை நகருக்குள் நுழையக்கூடாது என்றும், மீறினால் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், கடந்த 2024ம் ஆண்டு ஜனவரி 22ம் தேதி மாநில போக்குவரத்து துறை ஆணையம் உத்தரவு பிறப்பித்தது.

இந்த உத்தரவை எதிர்த்து தனியார் பேருந்து நிறுவனங்கள் சார்பிலும், ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் சங்கம் சார்பிலும் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த வழக்குகளை விசாரித்த உயர் நீதிமன்றம், போரூர், சூரப்பட்டு ஆகிய இடங்களில் பயணிகளை ஏற்றி, இறக்க ஆம்னி பேருந்துகளுக்கு அனுமதியளித்ததுடன், தென் மாவட்டங்களுக்குச் செல்லும் அனைத்து பேருந்துகளும் கிளாம்பாக்கம் பேருந்து முனையத்துக்குள் சென்று பயணிகளை ஏற்றி, இறக்க வேண்டும் எனவும் இடைக்கால உத்தரவை பிறப்பித்திருந்தது.

இந்த வழக்கின் இறுதி விசாரணையை மேற்கொண்ட நீதிபதி வி.லட்சுமி நாராயணன், தமிழ்நாடு மோட்டார் வாகன சட்ட விதிகளின்படி, பேருந்து முனையம் அமைக்க மாநில போக்குவரத்து ஆணையத்தின் ஒப்புதல் கோரி சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் விண்ணப்பிக்க முடியாது; சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு தான் விண்ணப்பிக்க முடியும் என்பதால், கிளாம்பாக்கம் பேருந்து முனையத்துக்கு ஒப்புதல் கோரி காட்டாங்குளத்தூர் பஞ்சாயத்து யூனியன், மாநில போக்குவரத்து ஆணையத்துக்கு விண்ணப்பிக்கலாம் என உத்தரவிட்டுள்ளார்.

மேலும், குறிப்பிட்ட வழித்தடத்தில் பேருந்து இயக்க உரிமம் வழங்கிய நிலையில், அதை தடுக்க முடியாது எனத் தெரிவித்த நீதிபதி, தனியார் ஆம்னி பேருந்துகள் கிளாம்பாக்கத்தில் இருந்து தான் இயக்க வேண்டும் என மாநில போக்குவரத்து ஆணையம் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்து உத்தரவிட்டார்.

கடந்த ஜனவரி மாதம் போக்குவரத்து துறை அதிகாரிகள், ஆம்னி பஸ் உரிமையாளர்கள் நடத்திய பேச்சுவார்த்தையில், போரூர் சுங்கச்சாவடி அல்லது சூரப்பேடு ஆகிய இடங்களில் பயணிகளை ஏற்றி இறக்குவதைப் போல, மாதவரம் ரவுண்டானா அருகில் உள்ள இடத்தையும் பயன்படுத்துவது என எடுக்கப்பட்ட முடிவை கண்டிப்புடன் பின்பற்ற வேண்டும் என நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.



■ திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.வந்தனா கார்க், மாவட்ட விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, அரசு தொழிற்பயிற்சி நிலையம் சார்பில் அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்கள் பங்குப்பெற்ற மாநில அளவிலான விளையாட்டு போட்டிகளில் வெற்றிப்பெற்றவர்களுக்கு பரிசுகள் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.

# “ஆதவ் அர்ஜுனாவுக்கு நாவடக்கம் வேண்டும்” அதிமுக துணை பொதுச் செயலர் கே.பி.முனுசாமி ஆவேசம்

கிருஷ்ணகிரி, ஜூன்.07–

“தவெக கட்சியை நிலைநிறுத்திக் கொள்வதற்காகப் பிற கட் சிகளைப் பலிகடாவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதனால் அதிமுக மீது வன்மத்தைக் காட்டுகிறார்கள். ஆதவ் அர்ஜுனா இதுபோன்ற சித்து விளையாட்டுகளையும், லாட்டரி சீட்டு விளையாட்டுகளையும் எங்களிடம் காட்ட வேண்டாம்” என அதிமுக துணை பொதுச் செயலாளர் கே.பி.முனுசாமி தெரிவித்தார்.

இது தொடர்பாக கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டணத்தில் அவர் இன்று செய்தியாளர்களிடம் கூறியது: “அதிமுகவில் பதவி சுகத்தை அனுபவித்துவிட்டு சிலர், தவெக அமைச்சர்கள் முன்னிலையில் அக்கட்சியில் இணைந்துள்ளனர். இந்த இணைப்பு விழாவில் பேசிய அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, தவறான பல கருத்துகளைத் தான்தோன்றித்தனமாகப் பேசியுள்ளார். அவருக்குக் கடும் கண்டனங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவர், நெல் மேல் குருவியைப் போல், எங்கெல்லாம் வாய்ப்புக் கிடைக்கின்றதோ, அங்கெல்லாம் ஓடி, ஓடிச் சென்றார்.

திமுக, விசிகவுக்கு சென்றவர், இறுதியாக அதிமுகவுக்கு வந்தார். ஆனால் அவருக்கு யாரும் வாய்ப்பு அளிக்கவில்லை. பின்னர், தவெகவுக்குச் சென்றார். தேர்தல் வந்தது, வாய்ப்புக் கிடைத்தது, வெற்றி பெற்றுப் பதவியும் பெற்றார். ஆனால், மற்றக் கட்சிகளின் வரலாற்றை, அவை வளர்ந்த விதத்தை, தொண்டர்களின் தியாகத்தை அவர் மதிப்பீடு செய்யாமல் தான்தோன்றித்தனமாகப் பேசுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு அதிமுக தொண்டனும் வாக்களித்ததால்தான் தவெக வெற்றி பெற்றது என ஆதவ் அர்ஜுனா கூச்சமில்லாமல், வெட்கப்படாமல் சொல்கிறார். அரசியலில் பண்பும், தர்மமும் இருக்க வேண்டும். இதே போல், “பேப்பர் அளவில்தான் பழனிசாமி பொதுச் செயலாளராக இருக்கிறார்” எனக் கூறியுள்ளார்.

அவருக்கு நாவடக்கம் வேண்டும். 52 ஆண்டு காலமாக ஒரு இயக்கத்தில் தொண்டனாக இருந்து, படிப்படியாக உயர்ந்து இன்று அதிமுக பொதுச் செயலாளராகப் பழனிசாமி உள்ளார். அதிமுகவில் உள்ள ஒவ்வொரு தொண்டனும், பொதுச்செயலாளர் மீது பற்றுடனும் அன்போடும் உள்ளனர். அதிமுகவின் வரலாறு ஆதவ் அர்ஜுனாவிற்குத் தெரியாது.



தமிழகம் முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது என்றால் அது திராவிடக் கட்சிகளின் ஆட்சியால்தான். அதிமுகவும் திமுகவும் பங்காளிகள். தவெக என்பது ஒரு சினிமா நடிகர் கொண்டு வந்த இயக்கம். அதிமுகவுக்கும் தவெகவுக்கும் சம்பந்தமே கிடையாது. அதிமுகவில் வெற்றி பெற்று 47 எம்எல்ஏக்களில் ஒரு சிலருக்கு ஆதவ் அர்ஜுனா நம்பிக்கை கொடுத்தார்.

அவர்கள், தவெகவுக்கு ஆதரவு அளிக்கலாம் எனக் கூறினர். ஆனால், இதற்கு நாம் எதிர்த்து வாக்களிக்க உள்ளோம் என அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி தெளிவாகத் தெரிவித்துவிட்டார். மேலும், தவெகவினர் நம்மிடம் ஆதரவு கேட்கவில்லை என்றும் அவர் கூறினார். அதனையும் மீறி எங்களது நண்பர்கள் சிலர் தவெகவுக்கு ஆதரவு அளித்தார்கள். ஆனால், தவெகவுடன் கூட்டணியில் இணைந்துள்ள கட்சியினர், அதிமுக ஆதரவைப் பெற்றால் நாங்கள் கூட்டணியை மறுபரிசீலனை செய்வோம் என்றனர்.

இதனால் ஆதவ் அர்ஜுனா அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் துரோகம் செய்தார். அதிமுக சட்டப்பேரவை உறுப்பினர்களை உடைக்கப் பார்த்தார்கள், பின்னர் திமுக கூட்டணியில் வெற்றி பெற்ற கட்சிகளை உடைத்தார்கள்.

காங்கிரஸ் தங்களைக் கூட்டணியில் தக்கவைத்துக் கொள்ள மாநிலங்களவை உறுப்பினர் பதவியைக் கொடுத்துள்ளது. தவெக கட்சியை நிலைநிறுத்திக் கொள்வதற்காகப் பிற கட்சிகளைப் பலிகடாவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அதிமுக மீது வன்மத்தைக் காட்டுகிறார்கள். இதுபோன்ற சித்து விளையாட்டுகளையும், லாட்டரி சீட்டு விளையாட்டுகளையும் எங்களிடம் காட்ட வேண்டாம். அதிமுகவின் உண்மையான தொண்டர்கள் எங்களுடன்தான் உள்ளனர்.

போலியான தொண்டர்களைத் தங்கள் பக்கம் அழைத்துக் கொண்டதற்காகத் தவெகவுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாஜக முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை தொடங்கவுள்ள புதிய மக்கள் இயக்கத்துக்கு வாழ்த்துகள். தமிழக மக்களை அண்ணாமலை ஏமாற்றாமல் இருக்க வேண்டும்” என்றார் அவர்.

## கோவையில் மாவட்ட, மண்டல் தலைவர்கள் உட்பட அண்ணாமலை ஆதரவாளர்கள் பாஜகவில் இருந்து விலகல்

கோவை, ஜூன்.07–

பாஜகவில் இருந்து அண்ணா மலை நேற்று வெளியேறிய நிலையில், கோவையில் அவரது ஆதரவாளர்களான மாவட்ட தலைவர்கள் உட்பட பலர் விலகி, பாஜகவுக்கு அதிர்ச்சி அளித்துள்ளனர்.

அண்ணாமலைக்கு தொடர்ந்து போஸ்டர் அடித்து, தனிக்கட்சி தொடங்குவதை எதிர்பார்த்திருந்த அவரது தீவிர ஆதரவாளரான பாஜக முன்னாள் மாவட்ட தலைவர் பாலாஜி உத்தம ராமசாமி நேற்று செய்தியாளர்களிடம் கூறும்போது, “அண்ணாமலை தொடங்கிய ‘வீ த லீடர்’ அமைப்பில் உறுப்பினராக சேர்ந்துள்ளோம்.

இது பாஜகவின் ‘பி’டீம் கிடையாது. வரும் தேர்தலில் போட்டி என அண்ணாமலை தெரிவித்துள்ளார். அது இடைத்தேர்தலாகவும் இருக்கும். உள்ளாட்சித் தேர்தலாகவும் இருக்கும்.

விஜய் அண்ணாமலை ஆகிய இருவரும்தான் இனி தமிழக அரசியலில் இருப்பார்கள்” என்றார். மற்றொரு தீவிர ஆதரவாளரான கோவை தெற்கு மாவட்ட பாஜக தலைவர் சந்திரசேகர் கட்சியில் இருந்து வெளியேறினார்.

அதேபோல் தெற்கு மாவட்டத்தில் உள்ள 22 மண்டல் தலைவர்களில் 14 பேர் விலகிய நிலையில் அவர்களுடன், பொறுப்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்களும் விலகினர்.

முன்னாள் மாவட்ட தலைவரும், எம்பி தேர்தலில் பொள்ளாச்சி தொகுதியில் போட்டியிட்டவருமான கே.வசந்தராஜன் வெளியிட் டுள்ள கடிதத்தில், “கடந்த 1998ம் ஆண்டு முதல் கிளைத் தலைவராக ஆரம்பித்து எம்.பி. வேட்பாளர் வரை என் போன்ற சாமானியரை உயர்த்தியது பாஜக.

கடந்த 28 ஆண்டுகளாக பயணித்த நிலையில், தற்போதைய தமிழக பாஜக, கட்சிக்கு பாடுபட்டவர்களை மரியாதையுடன் நடத்த வேண்டும் என்பது எனது ஆவல்.

இந்த நிலையில் உயிருக்கும் மேலாக நேசித்த பாஜகவில் இருந்து விலகுகிறேன். தமிழக நலன் கொண்ட தேசிய சிந்தனை கொண்ட, ஊழலற்ற, நேர்மையான அரசியல் பாதையில் அண்ணாமலையுடன் இணைந்து பயணிக்கிறேன்” எனத் தெரிவித்துள்ளார்.

## பிரத்யேக பிராண்ட் நிலையங்களை உருவாக்க ‘ஸ்டேட் ஆஃப் ஜாய்’ மெகா முதலீடு

சென்னை, ஜூன்.07–

இந்தியாவின் உண்மையான, இயல்பான, துணிச் சலான மனப்பான்மையைப் போற்றும் உள்நாட்டு ஸ்னீக்கர் பிராண்டான ‘State of Joy’, நாடு முழுவதும் அதிகாரபூர்வமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. நாட்டின் வளர்ந்து வரும் காலணிச் சந்தையில் ஒரு முக்கிய மைல்கல்லாக இது அமைந்துள்ளது. இத்துறையில் அனுபவம் வாய்ந்த புல்லேலா கோபாலகிருஷ்ணா பாச்சி, தாசரி ராஜு ரமேஷ் ஆகியோரால் நிறுவப்பட்ட இந்த நிறுவனம், சௌகரியம், நடை, சுய வெளிப்பாடு ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் வகையில் உடற்கூறியல் ரீதியாக வடிவமைக்கப்பட்ட ஸ்னீக்கர்கள் மூலம் அன்றாடம் அணியும் காலணிகளின் தன்மையை மறுவரையறை செய்ய முயல்கிறது.



புதிய அறிமுகம் குறித்துப் பேசிய ‘State of Joy’ன் நிறுவனர் புல்லேலா கோபாலகிருஷ்ணா பாச்சி கூறுகையில்: “'State of Joy' ஒரு எளிய நம்பிக்கையுடன் உருவாக்கப்பட்டுள்ளது அதாவது காலணிகள் பார்ப்பதற்கு எவ்வளவு அழகாக இருக்கின்றனவோ, அதே அளவு அணிவதற்கும் சௌகரியமாக இருக்க வேண்டும். உடற்கூறியல் ரீதியாக வடிவமைக்கப்பட்ட எங்கள் காலணிகள் மூலம், மக்களின் இயற்கையான நடைக்கு ஆதரவளிக்கும் சௌகரியத்தை வழங்குவதிலும், அதேநேரத்தில் உண்மைத்தன்மை, தனித்துவம், மகிழ்ச்சியைக் கொண்டாடும் ஒரு பிராண்டை உருவாக்குவதிலும் நாங்கள் கவனம் செலுத்துகிறோம். நாடு முழுவதும் இதை நாங்கள் அறிமுகப்படுத்தும் வேளையில் தன்னம்பிக்கை, படைப்பாற்றல், நவீன இந்தியாவுக்கான மனப்பான்மையை பிரதிபலிக்கும் ஒரு சமூகத்தை உருவாக்குவதிலும் நாங்கள் மிகுந்த உற்சாகத்துடன் இருக்கிறோம்“ என்றார்.

நாடு முழுவதும் 800க்கும் மேற்பட்ட பிரீமியம் சில்லறை விற்பனைக் கடைகள், 3,000க்கும் மேற்பட்ட மல்டி பிராண்ட் கடைகளில் தனது தயாரிப்புகளை விற்பனை செய்யும் ‘State of Joy’, வலுவான ‘ஆம்னிசேனல்’ (omnichannel) உத்தி மூலம் நாடு முழுவதும் தனது தடத்தை விரிவுபடுத்துவதில் கவனம் செலுத்திவருகிறது. முன்னணி சில்லறை விற்பனை நெட்வொர்க்குகளில் தனது இருப்பை வலுப்படுத்துவது மட்டுமல்லாமல், பிரத்யேக பிராண்ட் விற்பனை நிலையங்களைத் தொடங்குவதிலும் இந்நிறுவனம் முதலீடு செய்து வருகிறது; இவை எதிர்கால வளர்ச்சிக்கு முக்கியப் பங்காற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# “மறந்து விடாதீர்கள்... தவெக ஆட்சி நடப்பதே நமது தயவில் தான்!” மு.க.ஸ்டாலின் பேச்சு

சென்னை, ஜூன்.07–

“நம்முடைய கூட்டணியில் இருந்த கட்சிகளின் தயவோடுதான் இன்றைக்கு இந்த ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது” என திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதியில் அதிமுக வேட்பாளராகப் போட்டியிட்ட காட்டாங்கொளத்தூர் வடக்கு ஒன்றிய அதிமுக செயலாளர் கஜேந்திரன் தலைமையில் மாற்றுக் கட்சியினர் திமுகவில் இணையும் விழா நடந்தது.

அப்போது பேசிய திமுக தலைவர் ஸ்டாலின், “எப்போதுமே ஓர் இயக்கத்தில் இருந்து இன்னொரு இயக்கத்துக்குப் பிரிந்து போகிறார்கள் என்று சொன்னால், ஏதோ ஒரு லாபத்தை அடிப்படையாக வைத்து, ஏதோ வசதியை மனதில் கொண்டு, ஆளுங்கட்சியை நோக்கித்தான் அதிகமாகப் போவது உண்டு. அதைத்தான் நாமும் பார்த்திருக்கிறோம்.

ஆனால், இன்றைக்கு திமுக ஆளுங்கட்சி அல்ல; ஆளுங்கட்சியாக இருந்து, இப்போது எதிர்க்கட்சியாக மாறி இருக்கிறது. அதனால் எதிர்க்கட்சியை நோக்கி நீங்கள் எல்லாம் வந்திருக்கிறீர்கள் என்று சொன்னால், பதவிக்காக நீங்கள் வரவில்லை, சொகுசாக வாழ வேண்டும் என்பதற்காக நீங்கள் எல்லாம் வரவில்லை. பணியாற்ற வேண்டும், இந்த இயக்கத்திற்குத் துணை நிற்க வேண்டும், தமிழ் சமுதாயத்திற்கு நாம் பாடுபட வேண்டும், இழந்திருக்கும் ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வோடு வந்திருக்கிறீர்கள்.



வெற்றி, தோல்வி என்பது நம்மைப் பொறுத்தவரையில் மாறி மாறி வரும். அதற்காக வெற்றியைக் கண்டு வெறி கொண்டு அலைந்து கொண்டிருப்பதும் இல்லை; தோல்வியைக் கண்டு துவண்டு விடாமல் என்றைக்கும் பணியாற்றக் கூடியவன்தான் திமுககாரன் என்பதை இன்றைக்கு நாம் நிரூபித்துக் கொண்டிருக்கிறோம்.

இந்த நிலையில்தான், இன்றைக்கு வெற்றி வாய்ப்பை நாம் இழந்திருந்தாலும், ஆட்சிப் பொறுப்பை நாம் இழந்திருந்தாலும், எதிர்க்கட்சி என்ற நிலையில் இருந்து பணியாற்றிக் கொண்டிருக்கும் இந்த சூழ்நிலையில், நீங்கள் எல்லாம் இங்கு கஜேந்திரன் தலைமையில் வந்து சேர்ந்திருப்பதை பார்த்து நான் மகிழ்ச்சி அடைகிறேன், பெருமைப்படுகிறேன். நீங்கள் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை.

இப்போது ஆட்சி நடப்பதே நம்முடைய தயவில் தான் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. ஏனென்றால், நாம் வெற்றி பெற வேண்டும்; திமுக தலைமையில் ஆட்சி அமைய வேண்டும்; எதிர்க்கட்சிகள் எல்லாம் தோற்க வேண்டும் என்ற நிலையில் தான் நாம் தேர்தல் களத்தைச் சந்தித்தோம். நம்முடைய கூட்டணியில் இருந்த கட்சிகளின் தயவோடு தான் இன்றைக்கு இந்த ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. திமுக ஆட்சிக்கு வர வேண்டும் என்று கருதி நம்மோடு கூட்டணியில் இருந்த கட்சிகளின் தயவோடுதான் இன்றைக்கு இந்த ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது.

அந்தக் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களே பல இடங்களில் குறிப்பிட்டுச் சொல்லி இருக்கிறார்கள், “நாங்கள் வருகிறபோது, எங்கள் கூட்டணிக் கட்சியின் தலைவர் திமுக தலைவர் மு.க.ஸ்டாலினிடத்தில் சொல்லிவிட்டுத் தான் வந்திருக்கிறோம்“ என்று சொன்னார்கள்.

அவர்கள் சொல்லிவிட்டுச் செல்லுகிற நேரத்தில் நான் சொன்னேன், “நீங்கள் செல்லுங்கள்; உங்களுடைய விருப்பம்; உங்களுக்கு இருக்கும் ஜனநாயகம்; நான் தடுக்க மாட்டேன். நாட்டிலே ஜனாதிபதி ஆட்சி வந்துவிடக் கூடாது; அதன் மூலமாக பாஜக ஆட்சி தமிழ்நாட்டில் வந்துவிடக் கூடாது என்ற அடிப்படையில் தான் அவர்களை நான் வழியனுப்பி வைத்தேன். எனவே, நம்முடைய தயவோடு நடைபெறும் இந்த ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க இந்த நிகழ்ச்சியில் உறுதி எடுப்போம்” என்று ஸ்டாலின் பேசினார்.

# நார்வே செஸ் போட்டியில் பட்டம் வென்று பிரக்ஞானந்தா சாதனை



ஒஸ்லோ, ஜூன்.7-
நார்வே செஸ் போட்டியில் பட்டம் வென்றார் இந்திய கிராண்ட் மாஸ்டர் பிரக்ஞானந்தா. இதன் மூலம் இந்த பட்டத்தை வென்ற முதல் இந்தியர் என்ற சாதனையை அவர் படைத்துள்ளார்.நார்வே நாட்டின் ஒஸ்லோ நகரில் நார்வே செஸ் போட்டி நடைபெற்றது. 6 வீரர்கள் கலந்து கொண்ட இந்த தொடரின் 10வது மற்றும் இறுதி சுற்றில் ஜெர்மனி நாட்டின் வின்சென்ட் கீமரை பிரக்ஞானந்தா வீழ்த்தினார். இதன் மூலம் மொத்தம் 18 புள்ளிகளை பெற்று அவர் பட்டம் வென்றார். அமெரிக்காவின் வெஸ்லி 17 புள்ளிகளுடன் இரண்டாம் இடம் பிடித்தார்.20 வயதான பிரக்ஞானந்தா தொடர்ச்சியாக நான்கு கிளாசிக் பிரிவு ஆட்டத்தில் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது. இறுதி சுற்று ஆட்டத்துக்கு முன்னதாக நடைபெற்ற 9 சுற்றுகளின் முடிவில் அமெரிக்காவின் வெஸ்லி சோ 15.5 புள்ளிகளுடன் முதலிடத்தில் இருந்தார். பிரக்ஞானந்தா 15 புள்ளிகளுடன் 2வது இடத்தில் இருந்தார். பிரான்ஸின் அலிரேசா ஃபிரோஸ்ஜா 14.5 புள்ளிகளுடன் 3வது இடத்தில் இருந்தார். இதனால் வெஸ்லி சோ, பிரக்ஞானந்தா, அலிரேசா ஃபிரோஸ்ஜா ஆகியோரில் யாரேனும் ஒருவர் பட்டம் வெல்லும் வாய்ப்பு இருந்தது. இந்நிலையில், வெஸ்லி சோ, அலிரேசா ஃபிரோஸ்ஜா இடையிலான ஆட்டம் டிரா ஆனது. அதனால் அதிக புள்ளிகள் பெற்ற பிரக்ஞானந்தா பட்டம் வென்றார்.
இறுதி சுற்றின் முடிவில் பிரக்ஞானந்தா 18 புள்ளிகள், வெஸ்லி 17 புள்ளிகள், அலிரேசா ஃபிரோஸ்ஜா 15.5 புள்ளிகள், கார்ல்சன் 13 புள்ளிகள், வின்சென்ட் கீமார் 11 புள்ளிகள், டி.குகேஷ் 8 புள்ளிகள் பெற்றிருந்தனர்.

# “சொன்னது ஒன்று... செய்வது ஒன்று!” தவெக அரசின் வாக்குறுதி மீறலைக் கண்டித்துத் தமிழகம் தழுவிய தொடர் போராட்டம்!

தூத்துக்குடி, ஜூன்.7-
தேர்தல் களத்தில் வாக்குகளை அறுவடை செய்வதற்காக அள்ளி வீசப்படும் கவர்ச்சிகரமான வாக்குறுதிகள், ஆட்சிக் கட்டிலில் ஏறியவுடன் அதிகார வர்க்கத்தின் 'நிபந்தனைகள்' மற்றும் 'குளறுபடியான அரசாணைகள்' என்ற பெயரில் சுருக்கப்படுவது காலங்காலமாகத் தொடரும் துரோகம்!"தேர்தலில் சொன்ன வாக்குறுதியை முழுமையாக நிறைவேற்றாமல், விவசாயிகளின் வாழ்வாதாரத்தில் தமிழக அரசு லாப நஷ்ட கணக்கு பார்க்கக் கூடாது" என்று தமிழ்நாடு விவசாய சங்கங்களின் கூட்டு இயக்கத்தின் தூத்துக்குடி தென் மண்டலப் பொறுப்பாளரும், சாத்தான்குளம் தென்பகுதி விவசாய சங்கத் தலைவருமான கி. லூர்து மணி தனது அறிக்கையில் மிகக் காரசாரமாகக் குறிப்பிட்டுள்ளார்.
அவரது கண்டன அறிக்கையில், "தமிழக வெற்றி கழகம் தனது தேர்தல் அறிக்கையில் சிறு, குறு விவசாயிகள் பெற்றுள்ள பயிர் கடன் முழுவதும் தள்ளுபடி செய்யப்படும் என்றும், பெரு விவசாயிகள் பெற்றுள்ள பயிர் கடனில் 50 சதவீதம் தள்ளுபடி செய்யப்படும் என்றும் அறிவித்திருந்தது. ஆனால், தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியில் அமர்ந்ததும், அந்த வாக்குறுதியை முழுமையாக நிறைவேற்றாமல் குளறுபடியான அரசாணையை வெளியிட்டு, நியாயமில்லாத காரணங்களைக் கூறி ஏமாற்றுகிறது. சொன்ன சொல்லைக் காப்பாற்றுவதே சிறந்த அரசு. நாட்டின் முதுகெலும்பாகவும், ஒட்டுமொத்த வளர்ச்சியின் அச்சாணியாகவும் விளங்கும் விவசாயிகள் இயற்கை சீற்றங்கள், பருவநிலை மாற்றங்கள், இடுபொருட்களின் விலை உயர்வு, கூலி உயர்வு, விளைபொருள்களுக்கு நிலையான விலை இல்லாமை போன்ற பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர்" என்று சாடியுள்ளார்மேலும், "விவசாய பயிர் கடன் தள்ளுபடியில் சொன்னது ஒன்றும் செய்வது ஒன்றாக இருப்பதால், தமிழகம் முழுவதும் உள்ள விவசாயிகள் அரசைத் தண்டிக்கும் விதமாகத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். தற்போது தமிழக அரசுக்கு வழிகாட்டும் விதமாக, மகாராஷ்டிர மாநில அரசு ₹2 லட்சம் வரை பெற்றுள்ள பயிர் கடன்களைத் தள்ளுபடி செய்வதோடு, சரியான நேரத்தில் கடனை கட்டியவர்களை ஊக்குவிக்கும் வகையில் ₹50,000 வழங்கி விவசாயிகளுக்கு இன்ப அதிர்ச்சி கொடுத்துள்ளது. எனவே, மராட்டிய அரசைப் போலவே தமிழக அரசும் விவசாயிகளுக்குப் பயிர் கடனை முழுமையாகத் தள்ளுபடி செய்ய வேண்டும்" என்று அவர் தாழ்மையுடன் கேட்டுக்கொண்டுள்ளார்.*சக்கர வியூகம் வாய்ஸ்:*
தேர்தல் களத்தில் வாக்குகளை அறுவடை செய்வதற்காக அள்ளி வீசப்படும் கவர்ச்சிகரமான வாக்குறுதிகள், ஆட்சிக் கட்டிலில் ஏறியவுடன் அதிகார வர்க்கத்தின் 'நிபந்தனைகள்' மற்றும் 'குளறுபடியான அரசாணைகள்' என்ற பெயரில் சுருக்கப்படுவது காலங்காலமாகத் தொடரும் துரோகம்! சாத்தான்குளம் விவசாய சங்கத் தலைவர் ஏ. லூர்து மணி சுட்டிக்காட்டியுள்ளது போல, தேர்தல் அறிக்கையில் சிறு, குறு விவசாயிகளுக்கு முழு தள்ளுபடி என்று கூறிவிட்டு, தற்போது அரசு நிர்வாகக் கணக்குகளைக் காட்டி விவசாயிகளை அலைக்கழிப்பது தவெக அரசின் நம்பகத்தன்மைக்கே விழுந்த சம்மட்டி அடி. மராட்டிய மாநில அரசைப் போலத் துணிச்சலான முடிவுகளை எடுத்து, நாட்டின் அச்சாணியான விவசாயிகளைக் காக்க வேண்டியது மாநில அரசின் தார்மீகக் கடமை. சொன்ன சொல்லைக் காப்பாற்றத் தவறினால், உழவர்களின் தொடர் போராட்டம் இந்த ஆட்சியின் அஸ்திவாரத்தையே அசைத்துப் பார்க்கும் என்பதே சக்கரவியூகத்தின் கறாரான பார்வை!

# பாகிஸ்தானுக்கு உளவு பார்த்த வழக்கில் யூடியூபர் ஜோதி மல்ஹோத்ராவுக்கு ஜாமீன் மறுப்பு



புதுடெல்லி, ஜூன்.7-
பாகிஸ்தானின் உளவு நிறுவனம் ஐஎஸ்ஐ, அந்நாட்டு ராணுவத்துக்கு உளவு பார்த்த வழக்கில் யூடியூபர் ஜோதி மல்ஹோத்ராவுக்கு ஜாமீன் வழங்க உச்ச நீதிமன்றம் மறுத்து விட்டது.பாகிஸ்தானுக்கு உளவு பார்த்ததாக ஹரியானா மாநிலம், ஹிஸாரை சேர்ந்த யூ டியூபர் ஜோதி மல்ஹோத்ரா கடந்தாண்டு மே 16ம் தேதி கைது செய்யப்பட்டார். இந்த வழக்கில் ஓராண்டுக்கு மேல் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஜோதி மல்ஹோத்ரா பஞ்சாப்ஹரியானா உயர் நீதிமன்றத்தில் ஜாமீன் மனுவை தாக்கல் செய்தார். இந்த மனு கடந்த மார்ச் 7ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டது.இதை எதிர்த்து ஜோதி மல்ஹோத்ரா சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த ஜாமீன் மனுவை உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தீபாங்கர் தத்தா, சதீஷ் சந்திர சர்மா அடங்கிய அமர்வு நேற்று விசாரித்தது.ஜோதி மல்ஹோத்ரா சார்பில் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் சர்வேஷ் குமார் யாதவ் கூறும்போது, “கடந்த ஆண்டு மே 16ம் தேதி கைது செய்யப்பட்ட ஜோதி ஓராண்டுக்கும் மேலாக சிறையில் உள்ளார். எவ்வித குற்ற வழக்குகளிலும் தொடர்பு இல்லாத அவருக்கு ஜாமீன் வழங்க வேண்டும்”என்று வாதிட்டார். இதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் கடும் ஆட்சேபம் தெரிவித்தார். இருதரப்பு வாதங்களை கேட்ட பிறகு நீதிபதிகள் கூறும்போது “தேசப் பாதுகாப்பில் சமரசம் என்பதே கிடையாது. மனுதாரர் ஜோதி அண்டை நாட்டுக்கு (பாகிஸ்தான்) சென்றதாக குற்றம் சாட்டப்பட்டு உள்ளது. நாட்டை விட்டு வெளியேற உத்தரவிடப்பட்ட நபருடன் அவர் தொடர்பில் இருந்துள்ளார். அவர் வழக்கு விசாரணையைச் சந்திக்க வேண்டும். மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்படுகிறது” என்று உத்தரவிட்டனர்

# கிரேட் நிக்கோபார் மெகா திட்டத்துக்கு ராகுல் கண்டனம்



புதுடெல்லி, ஜூன்.7-
கிரேட் நிக்கோபார் தீவு மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம், அங்குள்ள சுற்றுச்சூழல் மற்றும் உள்ளூர் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கும் என்று ராகுல் காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.இதுதொடர்பாக அவர் தனது ‘எக்ஸ்' சமூக ஊடகப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியுள்ளதாவது: இந்தியாவின் தென்கோடி முனையான ‘இந்திரா பாயிண்ட்' பகுதிக்கு அண்மையில் பயணம் மேற்கொண்டேன். அங்கு வாழும் பழங்குடியின மக்கள் மற்றும் குடியேறியவர்களுடன் கலந்துரையாடிய வீடியோ ஒன்றை இத்துடன் பகிர்ந்துள்ளேன்.கிரேட் நிக்கோபார் கடல் பகுதியில் ‘ஸ்கூபா டைவிங்' எனப்படும் ஆழ்கடல் நீச்சல் மேற்கொண்டு, அங்கிருக்கும் பவளப்பாறைகளைப் பார்வையிட்டு, உள்ளூர் மக்களுடன் உரையாடினேன். அப்போது, மத்திய அரசின் கிரேட் நிக்கோபார் மெகா திட்டத்தால் வன உரிமைச் சட்டம் மீறப்பட்டு, பழங்குடியின மக்கள் தங்களது நிலங்களை இழந்து வருவது குறித்து அறிந்து கொண்டேன். மேலும், அரசாங்கத்தால் அங்கு மறுகுடியேற்றம் செய்யப்பட்ட முன்னாள் ராணுவத்தினர் உள்ளிட்ட குடியேறிகளுக்கு இழப்பீடு வழங்கப்படவில்லை. நாட்டின் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிப்பதாக இருந்தால், ‘ஜனன்ஸ் பாஸ்' தளத்தை விரிவாக்கம் செய்ய வேண்டும். இத்திட்டத்தின் காரணமாக 1.5 கோடி மரங்கள் வெட்டப்படும் அபாயம் உள்ளது. பவளப்பாறைகள் சேதமடைவதுடன், பழங்குடியின மக்களும், ராணுவப் பணியாளர்களும் இடம்பெயர நேரிடும்.
மேலும், பவளப்பாறைகள் இருக்கும் விவரம் அதிகாரப்பூர்வ வரைபடங்களிலிருந்து நீக்கப்பட்டுள்ளது. இந்தத் தீவுகள் உலகம் இதுவரை கண்டிராத மிக அசாதாரணமான, நிலையான சுற்றுலாத் தலமாக விளங்க தகுதியானவை. அத்தகைய இந்தியாவிற்காகவே நாம் போராட வேண்டும். இவ்வாறு ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.



# வானிலை முன்னறிவிப்பு: கோவை, மதுரை உள்ளிட்ட 14 மாவட்டங்களில் கனமழை வாய்ப்பு

சென்னை, ஜூன்.7-
தமிழகத்தில் திருநெல்வேலி, கோவை, மதுரை உள்ளிட்ட 14 மாவட்டங்களில் (ஜூன் 7) கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: வடக்கு கேரளா மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் சுமார் 3.1 கி.மீ. உயரத்தில் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக தமிழகத்தில் நாளை (ஜூன் 7) முதல் 9ம் தேதி வரை ஒருசில இடங்களிலும், 10 முதல் 12ம் தேதி வரை ஓரிரு இடங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.தமிழகத்தில நாளை (ஜூன் 7) தென்காசி, திருநெல்வேலி, கோவை மாவட்டங்களின் மலைப்பகுதிகள், நீலகிரி, திருப்பூர், திண்டுக்கல், தேனி, கன்னியாகுமரி, ஈரோடு, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, மதுரை மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.8ம் தேதி தென்காசி, திருநெல்வேலி, கோவை மாவட்டங்களின் மலைப்பகுதிகள், நீலகிரி, திருப்பூர், தேனி, திண்டுக்கல், கன்னியாகுமரி, ஈரோடு மற்றும் சேலம் மாவட்டங்களிலும், 9ம் தேதி தென்காசி, திருநெல்வேலி, கோவை, திருப்பூர், திண்டுக்கல் மாவட்டங்களின் மலைப்பகுதிகள் மற்றும் தேனி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலும், 10ம் தேதி திருநெல்வேலி மாவட்டத்தின் மலைப்பகுதிகள் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்திலும் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும்.சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஓரிரு பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 104 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 86 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும். தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் நாளை முதல் 10ம் தேதி வரை சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கி.மீ. வேகத்திலும், இடையிடையே 60 கி.மீ. வேகத்திலும் வீசக்கூடும்.தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டையில் 5 செமீ, திருநெல்வேலி மாவட்டம் நாலுமுக்கு, ஊத்து, கோவை மாவட்டம் சோலையார், சின்னக்கல்லார், கன்னியாகுமரி மாவட்டம் முள்ளங்கினாவிளை, நெய்யூர் நீலகிரி மாவட்டம் அவலாஞ்சி, சென்னை கத்திவாக்கத்தில் தலா 3 செமீ மழை பதிவாகியுள்ளது

## “யதார்த்த உலகில் வாழுங்கள்”

# மொஜ்தபா கமேனியை சந்திக்க விரும்பும் ட்ரம்ப்புக்கு ஈரான் பதில்





தெஹ்ரான், ஜூன்.7-
ஈரான் உச்ச தலைவர் மொஜ்தபா கமேனியை சந்திக்க தயாராக இருப்பதாக டொனால்டு ட்ரம்ப் கூறியதற்கு, அவர் யதார்த்த உலகில் வாழ வேண்டும் என்று ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி தெரிவித்துள்ளார்.
இது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய அப்பாஸ் அராக்சி, “உச்ச தலைவர் மொஜ்தபா கமேனியை சந்திக்க தயாராக இருப்பதாகவோ அல்லது சந்திப்பை விரும்புவதாகவோ டொனால்டு ட்ரம்ப் கூறியதாக நான் ஒரு செய்தியைப் பார்த்தேன். அவர் யதார்த்தத்துடன் இருக்க வேண்டும். நாம் யதார்த்த உலகில் சிந்திக்கவும் வாழவும் வேண்டும்” என்று தெரிவித்துள்ளார். இதன்மூலம், மொஜ்தபா கமேனி டொனால்டு ட்ரம்ப் சந்திப்பை நிராகரிக்கும் முடிவை ஈரான் எடுத்துள்ளது.
அமெரிக்காவுடனான பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதா என்ற கேள்விக்கு பதில் அளித்த அப்பாஸ் அராக்சி, “மத்தியஸ்தர்கள் மூலம் இரு தரப்பினரும் தொடர்ந்து தகவல்களை பரிமாறிக்கொண்டாலும் பேச்சுவார்த்தைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இல்லை” என்று தெரிவித்தார்.முன்னதாக, வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களைச் சந்தித்த அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப், “ஈரான் உச்சத் தலைவர் மொஜ்தபா கமேனியைச் சந்திக்க வேண்டும் என்று நான் விரும்பவில்லை. ஆனால், அப்படிச் சந்தித்தால் அதனை பெருமையாகக் கருதுவேன். நாங்கள் ஓர் ஒப்பந்தத்தை எட்ட முடியுமா என்பதை பார்க்க விரும்புகிறேன். ஒருவேளை ஒப்பந்தம் ஏற்பட்டால் அவரைச் சந்திக்க வாய்ப்பு உள்ளது. அப்போதை அவரைச் சந்திக்க எனக்கு சம்மதமே. இந்தச் சந்திப்பை நான் பரிந்துரைக்கவில்லை. ஆனால், சிலர் பரிந்துரைத்துள்ளார்கள். அப்படி ஒரு சந்திப்பு நடக்க முடியும் என்றால் நடக்கும். அப்போது நான் மரியாதையுடன் நடந்து கொள்வேன். நான் அவருக்குப் பிடித்தமான நபர் அல்ல என்பதை சொல்வேன். அதேநேரத்தில், அவர் ஒரு தொழில்முறை அணுகுமுறை கொண்டவராகவ இருப்பார். சில வட்டாரங்களில் அவருக்கு மிகச் சிறந்த நற்பெயர் உள்ளது” என தெரிவித்தார்.ஈரான் உடனான மோதல் காரணமாக கச்சா எண்ணெய் விலை உயர்ந்து வருவது குறித்த கேள்விக்கு பதில் அளித்த டொனால்டு ட்ரம்ப், “நிலைமை இதைவிட மோசமாக இருக்கும் என்று மக்கள் நினைத்தார்கள். இன்று ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் விலை 96 டாலராக உள்ளது. ஆனால், அது 300 டாலராக உயரும் என மக்கள் நினைத்தார்கள்” எனத் தெரிவித்தார்.

# பதவியேற்ற இரண்டே நாளில் கர்நாடக மூத்த அமைச்சர் ராமலிங்க ரெட்டி ராஜினாமா



பெங்களூரு, ஜூன்.7-
கர்நாடக முதல்வராக டி.கே.சிவகுமார் கடந்த 3ம் தேதி பதவியேற்றார். அன்றைய தினம் டி.கே.சிவகுமாருடன் துணை முதல்வர் உட்பட 12 அமைச்சர்கள் மட்டுமே பதவியேற்றனர்.அவர்களில் மூத்த அமைச்சர் ராமலிங்க ரெட்டிக்கு நீர்வளத் துறையும், கே.ஜே.ஜார்ஜிக்கு மின்சாரம் மற்றும் சுற்றுலா துறையும் ஒதுக்கப்பட்டது. அவர்கள் வேறு துறையை கோரிய நிலையில் இந்த துறைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டதால் இருவரும் அதிருப்தி அடைந்ததாக கூறப்படுகிறது.இந்நிலையில் ராமலிங்க ரெட்டி நேற்று தனது அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார். பதவியேற்ற 2வது நாளில் மூத்த அமைச்சர் ராஜினாமா செய்ததால் முதல்வர் டி.கே.சிவகுமாருக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அதிருப்தி அடைந்துள்ள ராமலிங்க ரெட்டியை சமாதானப்படுத்தும் முயற்சியில் அவர் இறங்கியுள்ளார். மூத்த காங்கிரஸ் தலைவரான ராமலிங்க ரெட்டி 6 முறை அமைச்சர் பதவி வகித்துள்ளார்.உள்துறை, போக்குவரத்து உள்ளிட்ட துறைகளின் அமைச்சர் பதவிகளை வகித்துள்ள அவர் மீது பெரிய அளவில் ஊழல் புகார் எதுவும் எழுந்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# அதிமுக முன்னாள் அமைச்சர்கள் எம்.சி.சம்பத், கடம்பூர் ராஜு, உடுமலை ராதாகிருஷ்ணன் தவெகவில் ஐக்கியம்!



சென்னை, ஜூன்.7-
அதிமுக முன்னாள் அமைச்சர்களான எம்.சி.சம்பத், கடம்பூர் ராஜு, உடுமலை ராதாகிருஷ்ணன் ஆகியோர் தங்கள் ஆதரவாளர்களுடன் தவெக பொதுச் செயலாளர் என்.ஆனந்த் முன்னிலையில் அக்கட்சியில் இணைந்தனர். தமிழகத்தில் நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக மூன்றாம் இடத்துக்கு தள்ளப்பட்டது. 47 தொகுதிகளில் மட்டுமே அக்கட்சி வெற்றி பெற்றது. பல தொகுதிகளில் அக்கட்சி டெபாசிட் இழந்தது. ஜெயலலிதாவின் மறைவுக்குப் பிறகு அக்கட்சி தொடர் தோல்வியை சந்தித்து வருகிறது.இது, அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியின் தலைமை மீதான நம்பிக்கையை பெருமளவில் சிதைத்து வருவதாக அரசியல் நோக்கர்களால் கூறப்படுகிறது.
கூட்டணி அமைத்துப் போட்டியிட்டும் அதிமுக வெற்றி பெறாத நிலையில், தனித்துப் போட்டியிட்ட முதல் தேர்தலிலேயே விஜய்யின் தவெக 108 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றி உள்ளது. இதனால், தேர்தலை அடுத்து அதிமுகவை சேர்ந்த 20க்கும் மேற்பட்ட எம்எல்ஏக்கள் தவெகவுக்கு ஆதரவாக செயல்பட்டனர்.நம்பிக்கை வாக்கெடுப்பின்போது அவர்கள் தவெக அரசுக்கு ஆதரவாகவும் வாக்களித்தனர். அதோடு, அதிமுகவை சேர்ந்த 4சட்டப்பேரவை உறுப்பினர்கள் தங்கள் பதவியை ராஜினாமா செய்துவிட்டு தவெகவில் இணைந்தனர்.
இந்நிலையில், அதிமுகவின் முன்னாள் அமைச்சர்களான எம்சி சம்பத், கடம்பூர் ராஜு, உடுமலை ராதாகிருஷ்ணன் ஆகியோர் இன்று தவெகவில் இணைந்தனர். தங்கள் ஆதரவாளர்களோடு சென்னை பனையூரில் உள்ள தவெக அலுவலகத்துக்கு வந்த அவர்கள், அக்கட்சியின் பொதுச் செயலாளர் என்.ஆனந்த், அமைச்சர்கள் ஆதவ் அர்ஜுனா, மரிய வில்சன் முன்னிலையில் தங்களை தவெகவில் இணைத்துக்கொண்டனர்.
மேலும், ராமநாதபுரம் மாவட்ட அமமுகவினர், மாவட்ட அளவில் கட்சியை கலைத்துவிட்டு தற்போது தவெகவில் இணைய உள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

# “2,439 கி.மீ… ₹53 லட்சம் வருவாய்!” சேலம் இரயில்வே கோட்டம் படைத்த பிரம்மாண்ட சாதனை




சேலம், ஜூன்.7-
சேலம் இரயில்வே கோட்டம், கடந்த 2026 ஜூன் 3 அன்று பிற்றுமின் (தார்) ஏற்றிய 45 கொள்கலன்களைக் கொண்ட ஒரு சரக்கு இரயில் மூலம், தனது மிக நீண்ட தூர சரக்கு போக்குவரத்தைப் பதிவு செய்து புதிய சாதனை படைத்துள்ளது.சேலம் கோட்டத்தின் அதிகாரப்பூர்வ அறிக்கையின்படி, இந்த இரயில் தென்னக இரயில்வேயின் இருகூர் கன்டெய்னர் டிப்போ நிலையத்திலிருந்து புறப்பட்டு, கிழக்கு மத்திய இரயில்வேயின் தானாபூர் கோட்டத்திலுள்ள ஃபதுஹா நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்திய கன்டெய்னர் கழகம் (CONCOR), மெஸர்ஸ் பிரிஸ்க்வொர்ல்டு வென்ச்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துடன் இணைந்து, மொத்தம் 90 TEUகள் பிற்றுமின் சரக்கை ஏற்றி இந்தச் சாதனையை நிகழ்த்தியுள்ளது.நடப்பு நிதியாண்டான 202627 இல் சேலம் இரயில்வே கோட்டத்திலிருந்து புறப்பட்ட முதல் வெளிச்செல்லும் கொள்கலன் போக்குவரத்து இதுவாகும். இந்த இரயில் மொத்தம் 2,340 டன் எடையுள்ள பிற்றுமின் சரக்கை ஏற்றி, 2,439 கி.மீ தூரத்தைக் கடந்து, இரயில்வே துறைக்கு ₹53 லட்சம் சரக்கு வருவாயை ஈட்டித் தந்துள்ளது.கொச்சியிலுள்ள இரும்புனம் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து சேகரிக்கப்பட்ட இந்த பிற்றுமின், பீகார் மற்றும் அதன் அண்டை மாநிலங்களில் தார்ச் சாலைகள் அமைப்பதற்காகப் பயன்படுத்தப்பட உள்ளது. இதன் மூலம் அப்பகுதிகளின் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்குப் பெரும் ஆதரவு கிடைப்பதோடு, தென்னக இரயில்வே மற்றும் CONCOR அதிகாரிகளின் நெருக்கமான ஒத்துழைப்பால் இந்த மைல்கல் சாத்தியமாகியுள்ளதாகச் சேலம் இரயில்வே கோட்டம் தெரிவித்துள்ளது.

# சேலத்தில் பூம்புகார் கைவினைப் பொருட்களின் பிரம்மாண்ட திருவிழா!



சேலம், ஜூன்.7-
தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் (பூம்புகார்) சார்பில், சேலத்தில் பரிசுப் பொருட்கள் கண்காட்சி மற்றும் சிறப்பு விற்பனை மிக விமரிசையாகத் தொடங்கப்பட்டுள்ளது. இக்கண்காட்சி வருகிற ஜூன் 30ஆம் தேதி வரை பொதுமக்களுக்காகத் தொடர்ந்து நடைபெறவுள்ளது.சேலம் திருவள்ளுவர் சிலை அருகே அமைந்துள்ள பூம்புகார் விற்பனை நிலையத்தில் நடைபெறும் இக்கண்காட்சியை, ஒன்றிய அரசின் கைவினைப் பொருட்கள் அபிவிருத்தி ஆணையத்தின் உதவி இயக்குநர் இந்திரா அவர்கள் முறைப்படி திறந்து வைத்துத் தொடங்கி வைத்தார். பாரம்பரிய கைவினைக் கலைகளைப் பாதுகாத்து, கைவினைக் கலைஞர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் பூம்புகார் நிறுவனம் இந்த உன்னத முயற்சியை மேற்கொண்டுள்ளது.இந்தக் கண்காட்சியில் பட்டுச் சேலைகள், பித்தளை விளக்குகள், மரச் சிற்பங்கள், தஞ்சாவூர் ஓவியங்கள், காகிதக் கூழ் பொம்மைகள், வெண்கல மற்றும் கருப்பு உலோகச் சிலைகள் எனப் பலதரப்பட்ட கலைப் பொருட்கள் அணிவகுத்து நிற்கின்றன. பொதுமக்களைக் கவரும் விதமாக, விற்பனை செய்யப்படும் அனைத்துப் பொருட்களுக்கும் 10% சிறப்புத் தள்ளுபடி அறிவிக்கப்பட்டுள்ளது. ரூ.150 முதல் ரூ.1.11 லட்சம் வரையிலான விலையில் கலைப் பொருட்கள் இடம்பெற்றுள்ள இக்கண்காட்சியின் மூலம், சுமார் ரூ.3 லட்சம் வரை விற்பனை இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தினமும் காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெறும் இக்கண்காட்சியைப் பொதுமக்கள் பார்வையிட்டுக் கலைஞர்களுக்கு ஆதரவளிக்குமாறு பூம்புகார் நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது.




■ மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள கொண்டையம்பட்டி ஊராட்சியில் சிறப்பு கிராம சபை கூட்டம் நடைபெற்றது.மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் கண்ணன், முன்னிலையில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் ஊராட்சி செயலாளர் ராஜேஷ் கலந்துகொண்டு தீர்மான நகலை வாசித்தார்.இதில் குடிதண்ணீர், தெருவிளக்கு வசதி,சிமெண்ட் சாலை மற்றும் பேவர்பிளாக் அமைத்தல்,குப்பை தரம் பிரித்தல் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. வடுகபட்டி ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபை கூட்டத்தில் யூனியன் அலுவலர் லெட்சுமி முன்னிலையில் கூட்டம் நடைபெற்றது. இதில் ஊராட்சி செயலாளர் பங்கஜவல்லி கலந்து கொண்டு தீர்மான நகலை வாசித்தார் இந்த கூட்டத்தில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பாலமுருகன்,மற்றும் பொதுமக்களும் பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்டனர் முடிவில் கம்ப்யூட்டர் ஆபரேட்டர் இந்துமதி நன்றி கூறினார்.



# தென்காசியில் மாபெரும் வர்த்தக கண்காட்சி

தென்காசி, ஜூன்.7-
தென்காசி மாவட்டம் தனியார் மண்டபத்தில் (06.06.2026) தென்காசி மாவட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் சங்கம் சார்பில் நடைபெற்று வரும் வர்த்தக கண்காட்சியினை மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் றி. மதன்ராஜா மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ்ஜீத் சிங்.இ.ஆ.ப. தலைமையில், திருநெல்வேலி நாடாளுமன்ற உறுப்பினர் ராபர்ட் புரூஸ் முன்னிலையில் பார்வையிட்டார்.தென்காசி மாவட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் சங்கம் சார்பில் மூன்று நாட்கள் நடைபெறும் வர்த்தக கண்காட்சியின் 2ஆம் நாள் நிகழ்வாக மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் பல்வேறு தொழில் நிறுவனங்கள் சார்பில் வர்த்தக கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள தொழில் நுட்பங்களைப் பார்வையிட்டு, அதன் செயல் திட்டங்கள் குறித்து கேட்டறிந்தார். தொடர்ந்து தொழில் முன்னோடியினர்களைப் பாராட்டி பாராட்டு சான்றிதழ் மற்றும் கேடயம் வழங்கி கௌரவித்தார்.
இந்நிகழ்வில், மாவட்ட தொழில் மைய மேலாளர் மாரியம்மாள், மாவட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் சங்கம் தலைவர் அன்பழகன், முக்கிய பிரமுகர்கள் ராஜ பிரகாஷ், நியாஸ், மாரியப்பன் மற்றும் சங்க உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# இயற்கையைக் காக்க களமிறங்கிய அரிமாக்கள்! சுற்றுச்சூழலைக் காக்க கைகோர்த்த கொடைக்கானல் பிரமுகர்கள்!

கொடைக்கானல், ஜூன்.7-
உலக சுற்றுச்சூழல் தினத்தினை முன்னிட்டு, திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் சன் அரிமா லயன்ஸ் கிளப் சார்பாகப் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பிரம்மாண்ட "மரக்கன்றுகள் நடும் விழா" மிகச் சிறப்பாக நடைபெற்றது.இவ்விழாவில் கொடைக்கானல் காவல் துணை கண்காணிப்பாளர் (DSP) கவிதா அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு மரக்கன்றுகளை நட்டு விழாவினைத் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சிக்குச் சன் அரிமா சங்கத்தின் மாவட்ட ஆளுநர் ரவீந்திரன், தலைவர் துர்கா செந்தில்குமார் ஆகியோர் தலைமை தாங்கினர்.
சங்கத்தின் செயலாளரும் கட்டிட ஒப்பந்ததாரருமான சுரேஷ் பால்ராஜ், பொருளாளர் மருத்துவர் நீது மற்றும் சங்கத்தின் உறுப்பினரான பொறியாளர் மில்க்யூ ஆகியோர் முன்னிலை வகித்தனர். கொடைக்கானலின் இயற்கை வளத்தையும், பசுமையையும் பாதுகாக்கும் நோக்கில் நடைபெற்ற இந்த உன்னத நற்பணியில் சன் அரிமா சங்கத்தின் மண்டல, வட்டார நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் பலரும் திரளாகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.




# ஒட்டன்சத்திரம் காந்திநகர் 16வது வார்டில் டாக்டர்.எம்.முத்து தலைமையில் 500க்கும் மேற்பட்டோர் தவெகவில் இணைந்தனர்

திண்டுக்கல், ஜூன்.7-
திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதி காந்திநகர் 16வது வார்டு பகுதியில் உள்ள 500க்கும் மேற்பட்ட மாற்று கட்சியினர் டாக்டர்.எம். முத்து தலைமையில் தமிழக வெற்றி கழகத்தில் இணைந்தனர்.இந்நிகழ்வில் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற வேட்பாளர் எஸ்.மோகன் கலந்து கொண்டு 16 வது வார்டில் வாக்களித்த பொதுமக்களுக்கு நன்றி தெரிவித்தார் மேலும் தமிழக முதல்வர் வாக்குறுதி அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றப்படும் என்பதையும் 16,17,18 வது வார்டில் உள்ள எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் டாக்டர் எம்.முத்துவிடம் தெரிவிக்க வேண்டும் என்பதையும் மாதம் ஒருமுறை ஒவ்வொரு பகுதியில் உங்களுடைய பிரச்சனைகளை கேட்டறிந்து தீர்த்து வைப்பேன் என்று வாக்குறுதியும் அளித்தார். இந்நிகழ்ச்சியில் செல்வபாண்டி,பாலமுருகன், திநேஷ்,சி வக்கிருஷ்ணன், சரவணன், சங்கீத்குமார், ஆனந்த்,ஜூம் மாஸ்டர் நவீன், வடிவரசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



# ஏழுமலையானுக்கு மே மாதம் ரூ.120 கோடி காணிக்கை

திருமலை, ஜூன்.7-
கோடைக்காலம் என்பதால் கடந்த மே மாதத்தில் திருப்பதி ஏழுமலையான் கோயிலில் கூட்டம் அலைமோதியது. 25 லட்சத்து 46,168 பக்தர்கள் சுவாமியை தரிசித்துள்ளனர். தேவஸ்தான வரலாற்றில் இது ஒரு சாதனையாக கருதப்படுகிறது. அதனால் உண்டியல் காணிக்கை மே மாதம் ரூ.120 கோடி செலுத்தப்பட்டுள்ளது. கடந்த மே மாதத்தில் 1.12 கோடி பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டுள்ளது.திருமலையில் 1.21 கோடி லட்டு பிரசாதம் விற்பனையாகி உள்ளது. நேர்த்திக்கடனான 14,38,385 பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்தி உள்ளனர்.கடந்த மே மாதத்தில் தினமும் சராசரியாக 17 மணி 25 நிமிடம் சாமானிய பக்தர்களுக்கு ஒதுக்கப்பட்டது. அதிகபட்சமாக மே 24ம் தேதி 98,058 பக்தர்கள் சுவாமியை தரிசனம் செய்தனர்



# கல்லணை கிராமத்தில் பாலமரத்தம்மன் (எ)சுந்தரவள்ளியம்மன் திருக்கோவில் கும்பாபிஷேகம்

அலங்காநல்லூர், ஜூன்.7-
மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள கல்லணை கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ பாலமரத்தம்மன் (எ) சுந்தரவள்ளியம்மன் கோவில்கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதனை தொடர்ந்து கிராமத்தின் சார்பில் மஞ்சமலை ஆற்றில் கனி சூறை விடும் நிகழ்ச்சி நடைபெற்றது முன்னதாக கோவிலிலிருந்து கிராமத்தின் சார்பாக அலங்காநல்லூர் மஞ்சமலை ஆற்றுக்கு மேளதாளங்கள் முழங்க வருகை தந்தனர் மஞ்சமலை ஆற்றில்வாழைப்பழம், தேங்காய், சந்தனம், குங்குமம், தென்னம்பூ, மலர்மாலை வைத்து பூசாரிகள் சிறப்பு பூஜைகள் செய்தனர் தொடர்ந்து விபூதி சந்தனம் குங்குமம் உள்ளிட்டவை கிராமத்தினருக்கு வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து கனி சூறையவிடும் நிகழ்ச்சி நடைபெற்றது. இவ்விழாவுக்கான ஏற்பாடுகளை கல்லணை கிராம பொதுமக்கள் செய்திருந்தனர்.

# காதலை முறித்த இளம்பெண்ணை அலுவலகத்திலேயே கொலை செய்த சக ஊழியர்





மொகாலி, ஜூன்.7-
பஞ்சாபின் பட்டியாலா பகுதியை சேர்ந்தவர் டிம்பிள் (29). அவர் மொகாலியில் உள்ள சரக்கு போக்குவரத்து நிறுவனத்தில் பணியாற்றி வந்தார். அதே நிறுவனத்தில் பணியாற்றிய ஹரிந்தர் சிங் மானும் (34), டிம்பிளும் 3 ஆண்டுகள் தீவிரமாக காதலித்து வந்தனர்.சில மாதங்களுக்கு முன்பு டிம்பிள் காதலை முறித்துக் கொண்டார். இந்த சூழலில் நேற்று முன்தினம் இரவு மொகாலி அலுவலகத்தில் டிம்பிள் பணியாற்றிக் கொண்டிருந்தபோது அறைக்குள் ஹரிந்தர் சிங் திடீரென நுழைந்து மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து டிம்பிளை சரமாரியாக குத்தினார். 35 விநாடிகளில் 30 முறை கத்திக் குத்து விழுந்தது. சக ஊழியர்கள் ஓடி வந்து ஹரிந்தரை தடுக்க முயன்றனர். ஆனால் அவர்களையும் கத்தியால் குத்தி விடுவதாக அவர் மிரட்டினார். இறுதியில் ஊழியர் ஒருவர், ஹரிந்தரை மடக்கிப் பிடித்தார். படுகாயமடைந்த டிம்பிள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். ஆனால் அவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். இதற்கிடையில், ஹரிந்தர் தனது கழுத்தில் கத்தியால் குத்தி தற்கொலைக்கு முயன்றார். தற்போது அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இதுகுறித்து மொகாலி போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஐகோர்ட் உத்தரவை மீறி ஊடகங்களில் பேசியதற்காக பகிரங்க மன்னிப்பு கேட்டார் நடிகர் ரவிமோகன்



சென்னை, ஜூன்.7-
ஐகோர்ட் உத்தரவை மீறி ஊடகங்களில் பேசியதற்காக பகிரங்க மன்னிப்பு நடிகர் ரவிமோகன் கேட்டுள்ளார். எனது கருத்தால் மனவேதனை அடைந்த அனைவரிடமும் எனது வருத்தத்தையும், மன்னிப்பையும் கேட்கிறேன். மனைவி ஆர்த்தியிடம் இருந்து விவாகரத்து கோரி நடிகர் ரவிமோகன் தொடர்ந்த வழக்கு நிலுவையில் உள்ளது. விவகாரத்து வழக்கு தொடர்பாக பொதுவெளியில் கருத்து தெரிவிக்க இரு தரப்புக்கும் ஐகோர்ட் தடை விதித்தது




SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000